

நித்திய வழிபாட்டுக்குரியது

# திரு. மா. சோமசுந்தரம்

# நினைவு மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மையும் எமது குடும்பத்தையும்

ஆளாக்கி அன்பு பொழிந்து

அருள் பொழிந்து

நல்வாழ்வளித்து

தெய்வமாகிவிட்ட

எம் அருமைத் தந்தையாரின்

திருவடிகளுக்கு

இம்மலர் சமர்ப்பணம்.

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

222/12, பண்டாரநாயக்கா
மாவத்தை,
கொழும்பு- 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள்

பல்லோரும் புகழும் பல நலமும் திகழும்
நல்லார் பலர் வாழும் நவாலிப் பதியினில்.
வல்ல குளத்தடி வைரவர் அருளினால்
இல்லறம் நல்லறமாக மருதப் பாதங்கமுத்துவின்
செல்லப் பிள்ளையாய் பிறந்திட்டாரே.

பாலனாய்ப் பள்ளி செல்லும் பருவத்திலே
காலனின் கொடுமையினால் தந்தையை இழந்தாரே
சீலமுடன் தாயார் சேர்த்த நல்வழியில்
காலமெலாம் வாழக் கற்றறிந்தாரே.

வேலக்கைப் பிள்ளையாரை நித்தம் வணங்கி
கலைசேர் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில்
கல்வித் திருவும் கவின்கலை பலவும் கற்று
பல்லோரும் போற்றும் பான்மை பெற்றாரே.

தொழில் பெற்றுயர்வு காண வேண்டி
எழில்மலை நாடு நோக்கிச் சென்று
வளமாரி தேயிலைத் தோட்டமதனில்
விளையும் பயிரென வேலை பயின்றாரே.

காலம் உருண்டோட காளை வயதினனாய்
உடுவில் பதிவாழ் சின்னையா மாணிக்கத்தின்
கடைசிப் பிள்ளையாம் தில்லை முத்துவை
கைப்பிடித்துக் களிப்பெய்தினரே.

ஆசைக்கெனப் பெண் பிள்ளை மூன்றும்
ஆஸ்திக்கென ஆண் பிள்ளை இரண்டும்
பாசத்துடன் பெற்று வளர்த்துப்
பாரினில் புகழுடன் வாழ வைத்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பிள்ளைகளும் அவனியில் அவைதனில்
முந்தி இருக்கும் வகையெலாம் செய்து
அந்தமில் கல்விச் செல்வமும் பிறவும்
தந்து ஆளாக்கித் தலைநிமிர்ந்து நின்றாரே,

மூத்த புதல்வியாம் விமலா தேவிக்கு
உரும்பராய் பதிவாழ் விக்கினேஸ்வரனை
பர்த்தாவாக்கிப் பிரசாந்தி எனும்
பேர்த்தியைப் பெற்று மகிழ்ந்திட்டாரே.

கமலாம்பிகை யெனும் இரண்டாம் புதல்வியை
களிப்புடன் ஊரெழு அமிர்தலிங்கனார்
கைப்பிடித்தே கிருசாந்தி எனும் பேர்
கண்நிறை பேர்த்தியை கண்டு களித்தாரே.

சோதி நாயகியும் பாலசுந்தரத்தை
இனிது மணந்து இல்லறம் நடாத்தி
தேவா, உமேஷ், தயா எனனும்
மூவரையும் பேரர்களாகப் பெற்றிட்டாரே.

வேத விநாயகனும் மூத்த புதல்வன்
தோகை சரோஜாவை மணந்திட
யோக விநாயகன் வாசுகி நல்லாளை
மாலையிட்டு துஷ்யத்தி ஆர்த்தி எனும்
கோல மக்களைப் பெற்றிட மகிழ்ந்தாரே.

நாற்பதாண்டுக்கு மேலாகக் கொழும்பில்
பொற்புடை மஸ்கன் நிறுவனப் பெருமை
ஏற்றம் பெற்றிடக் கண்டு மகிழ்ந்து
போற்றிப் புகழ்ந்து வாழ்ந்திட்டாரே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகுளக் கல்லாற்றங் கரையிலே
வெட்டிய காடுகள் விளை நிலமாகிக்
கொட்டிய செந்நெற் கதிர்கள் கண்டு
மட்டிலா மகிழ்ச்சியில் மலர்ந்திருந்தாரே.

கடைசி நாளது வரையும் கந்தோரின்
கடமையே பெரிதென்ற கர்மவீரன்
விடுமுறை பெற நினைந்தோ அரனடி ஏகினேன்.
மடமையோர் நாங்களும் இங்கு புலம்புவது.

*

## புலம்பல்

---

ஐயா என நாங்கள் ஆசையோடு அழைத்ததெல்லாம்
பொய்யாய் புனைகதையாய் போனதுவே—மெய்யாய்
செய்வதொன்றறியாது சிந்தை கலங்குகிறோம்
கையேந்தி நிற்கின்றோம் கடவுளடியினையே.

1 சிவன் அம்பாள் திருப்பேற்றைப் பெற்றார்
அவன் செயலே அனைத்துமெனக் கூறி- என்றும்
தவந்தானே செய்த சோமசுந்தரச் செம்மல்
சிவனடியுமேகினரே ஆவணித் திரியோதசியில்.

2 சீராரும் போற்றும் நவாலி பிறப்பிடமாய்
பேராளர் சோமசுந்தரப் பெரியோன் கொண்டே
சீராளன் ஆவணித் திரியோதசியில் இறைவனடி
ஏராரும் போற்ற ஏகினனே ஏரம்பன்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பேறு பெற்ற மோட்சம் இவ்வாறு பெற்றுய்ய
நூறு கோடி தவமல்லோ செய்ய வேண்டும்
ஆறுதலும் நாமடைவோம் இவரிழப்பில்
மாறுதலிலா எம்முடியும் இதுவன்றோ

4 எல்லையில்லா இறையன்பு கொண்ட செம்மல்
தில்லைப் பிள்ளை அம்மாவைக் கரம்பிடித்தே இனிது
எல்லையில்லாக் கல்வியுடன் பிள்ளைச் செல்வம்
பல்லோரும் போற்றப் பெற்றதுவும் பேறே.

5 தம்பி சுப்பிரமணியம் கதை தினம் கூறி மகிழ்ந்து
பரிவுடனே "மஸ்கன்" வளர்ச்சியையும் பார்த்து
அரிய சேவைதனை மறப்பாரோ உறவினரும்
சோமையா என இனியாரை அழைப்போமே ஐயா.

6 என்னே இறைவா இதுவுமுன் திருவிளையாட்டே
என் பேரன்பர் சோமையாவை உன் பாலழைத்தீர்
உன் பேரடியினைக்கு நித்தம் மலர் தூவ வென்றோ
தென்பே இல்லாது வேணியனும் நட்பிழந்தேன்.

7 அன்போடுங்களை ஐயா வென்று சின்னக்கடையில்
இன்பமாய் வந்தழைப்பேன் நாளும் தவறாமல்
என் பாலன்புகொண்டு தம்பி என விளிப்பீர்கள்
என்றோ இனிக் காண்பேன் இனியும் என் வாழ்நாளில்
[வேலணை வேணியன்

## திரிவெண்பா

### உன்பதம் வந்தணைந்தார் நன்றே.

நவாலியூர் நற்பெரியார் மருதப்பு சோமசுந்தரம்
அவாவுடன் அல்லலின்றி ஆவணித் திரியோதசியில்—
—நன்றே.
சிவாவென சிந்தனையிற் கொண்டவண்ணம்
தேவா வென உன்பதம் வந்தணைந்தார்.

# எல்லாம் இறைவன் செயல்

வல்லோன் நவாலியூர் மருதப்பு சோமசுந்தரம்
நல்லதோர் ஆவணித் திரியோதசித் திதியில்—நன்றே
பல்லோரும் பரவி மகிழ பரமனடி சேர்ந்தனரே
எல்லாம் இறைவன் செயல்

(வேலணை வேணியன்)

பங்குனி உத்தரந் தன்னில் பார்மீது வந்துதித்த
எங்கள் தலைவன் சோமசுந்தரப் பெருந்தகை—புகழ்
மங்கா ஆவணித் திரயோதசி ஆயிலிய நன்னாளில்
பாங்காகக் சேர்ந்தார் பரமனடியினையே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சிந்தனை

## அகவல்

சிந்தித்தவர்க் கருள் கணபதி ஜய ஜய
சீரியவானைக் கன்றே ஜய ஜய
அன்புடைய மரர்கட் கார்ப்பாய் ஜய ஜய
ஆவித் துணையே கணபதி ஜய ஜய
இணிடைச் சடை முடியிறைவா ஜய ஜய
ஈசன்றந்தருள் மகனே ஜய ஜய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜய ஜய
ஊர் நவ சந்தியுகந்தாய் ஜய ஜய
எம் பெருமானே இறைவா ஜய ஜய
ஏழுலகந் தொழ நின்றாய் ஜய ஜய
ஐயா கணபதி நம்பியே ஜய ஜய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜய ஜய
ஓங்கிய வானைக் கன்றே ஜய ஜய
ஔவியமில்லா அருளே ஜய ஜய
அஃரவஸ்து வானவா ஜய ஜய
கணபதி யென்வினை களைவாய் ஜய ஜய
ஙப்போர் மழுவொன்றேந்தியே ஜய ஜய
சங்கரன் மகனே சதுரா ஜய ஜய
ஞய நம்பினர் பாவாடிய ஜய ஜய
இடம்பட விக்கின விநாயகா ஜய ஜய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜய ஜய
தத்துவ மறை தெரி வித்தகா ஜய ஜய
நன்னெறி விக்கின விநாயகா ஜய ஜய
பள்ளியிலுறை தரும் பிள்ளாய் ஜய ஜய
மன்றுளாடும் மணியே ஜய ஜய
இயங்கிய ஞானக் குன்றே ஜய ஜய
அரவக் கிண் கிணி யார்ப்பாய் ஜய ஜய
இலவக் கொம்பன் றேந்திய ஜய ஜய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜய ஜய
அழகிய வானைக் கன்றே ஜய ஜய
இளமத யானை முகத்தாய் ஜய ஜய
இரகுபதி விக்கின விநாயகா ஜய ஜய
அனந்த லோடாதியிலடி தொழ வருளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

1ம் திருமுறை பண்குறிஞ்சி

கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
முற்றாவெண் திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

2ம் திருமுறை பண் சீகாமரம்

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

3ம் திருமுறை பண் காந்தார பஞ்சமம்

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும்
பால்சடைப் பனிகால் கதிர் வெண் திங்கள்
சூடினையருளாய் சுருங்கஎம தொல்வினையே.

4ம் திருமுறை. திருநாவுக்கரசர் தேவாரம் திரு நேரிசை

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமம் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தணனாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று தருமராசற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே

5ம் திருமுறை திருக்குறுந்தொகை

எங்கே என்னை யிருந்திடந் தேடிக் கொண்
டங்கே வந்தடையாளம் அருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய் மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா தென்கொலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் திருமுறை திருத்தாண்டகம்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக்கண்டேன்
பரிந்தார்க்கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய் மூரடிகளை நான் கண்டவாறே.

7ம் திருமுறை பண் நட்டராகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணிகளை வாய்
ஒடு நன்கலனாக உண்பலிக் குழல்வானே
காடு நின் இடமாகக் கடு இருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

நீள நினைந்தடியேனுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாளவளவாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப்
பெற்றேன்
ஆளில்லை எம்பெருமானவை யட்டித்தரப் பணியே

பண் சீகாமரம்

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்
தக்கால்
பழியதனைப் பாராதே படலமென் கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயே என்ன
உழையுடையான் உள்ளிருந்துவுளோம் போகீரென்றானே

8ம் திருமுறை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

மாயனே மறிகடல் விட முண்ட
வான வாமணி கண்டத் தெம்மமுதே
நாயினேனுனை நினையவுமாட்டேன்
நமச்சிவாயவென் றுன்னடி பணியாய்
பேயனாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகுலாஞ்சடைப் பிஞ்ஞகனேயோ
சேயனாகி நின்றலறுவதழகோ
திருப்பெருந் துறை மேவிய சிவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8ம் திருமுறை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற்கருளி செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை பொறுத்தன்றே வெறுத்திடவே

9ம் திருமுறை சேந்தனார் திருவிசைப்பா பண்—பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லைவளர்க நம்
பக்கத்தர்கள் வஞ்சர் பேர்யகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

10ம் திருமுறை திருமூலர் திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

11ம் திருமுறை நக்கீரர் திருமுருகாற்றுப்படை

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக் காலெப்பொழுது
நம்பியே கைதொழுவேன் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ம் திருமுறை சேக்கிழார் பெரிய புராணம்

கற்பனைக்கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடியருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனேன்
தந்தைவலத் தாலருள்கை கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே

## அபிராமி அந்தாதி

ஆசைக் கடலிலகப்பட்டளருற்ற வந்த கன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந்தேனை நின்பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலிய வைத்தாண்டுகொண்ட
நேசத்தை யென் சொல்லு வேனீசர் பாகத்துநேரிழையே

புண்ணியஞ் செய்தன மே மனமே புதுப் பூங்குவளைத்
கண்ணியுஞ் செய்ய கணவருங்கூடி நங்காரணத்தா
னண்ணியிங் கே வந்து தம்மடியார் கண்டு விருக்கப்
பண்ணி நஞ்சென்னியின் மேற் பத்மபாதம் பதித்திடவே

உ

சிவமயம்

## எட்டாம் திருமுறை திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

வெண்பா

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க.
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க

சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி

சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை

முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்

ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே.

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
பேராது நின்றப் பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்பானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்தங் கருத்தின்
நோக்கு அரியநோக்கே நுணுக்கு அரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்புஅரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர் வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாய்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப

ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

## கந்தசஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போந் துன்பம்போ நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்,
சஷ்டி கவசம் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர்தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

### நிலமண்டில் ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணியாட
மைய நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐய வருக
நீரிடும் வேலவன் நித்தம் வருக.
கிரி கிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனர் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோ நமோ
நிபவ சரஹண நிறநிற நிறென
லசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுக்க ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவுளம்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலியையும்
நிலை பெற்றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொல்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நன்மணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்பரிநூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இரு தொடை யழகும் இணை முழந்தாலும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியதினில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நக நக நக நக நக நக நகென
டிகு குண டிகு டிகு டிகு குண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து
என்றனையாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராய் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர் வேலிரண்டு கண்ணினை காக்க
விதி செவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசும் வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திரு பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிரு தோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றி வேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில் வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரலடியிணை அருள் வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க
முன் கையிரண்டும் முரண்வேல் காக்க
பின் கையிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பாணாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனக வேல் காக்க
வரும் பகறன்னில் வயிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளை கடின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனையடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிக் கட்டு
கட்டியுருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு முருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனிய வேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேள் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண் முகத்தரசே
காரார் குழலாள் கலைமகணன்றாய்
என்னாவிருக்க யானுன்னைப் பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்ன முஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க வென் வறுமைகணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவனீ குரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளை யென்றன்பாய் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுக் கொண்டு
ஓதியே செபித்துகந்து நீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோண் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீரெட்டா வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத் தடி
அறிந்தென துள்ளம்அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத் தேழ்வர்க்குவந்த முதளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்ற
எனைத் தடுத்தாட் கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக் கோரரசே
மயினடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

# சிறந்த சமூகத் தொண்டர்

வையகத்தில் மனிதர் பிறப்பதும் இறப்பதும் இயல்பு. இது இறைவனின் நியதி இருந்தும் ஒரு சிலரே வாழ்வில் பிறருக்கும் தங்கள் வாழ்க்கை பலன் பெறும் வண்ணம் நீடியகாலம் வாழ்ந்து இறைவனடி எய்தும் பாக்கியம் பெறுவது என்பது ஒரு பெரும் அருட் கொடை. இவ்வரிசையில் நவாலியூரைப் பிறப்பிடமாகக்கொண்டு அண்மையில் கொழும்பில் இறைவனடியெய்திய (சோமையா) திரு. ம. சோமசுந்தரம் வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டாகும்.

அமரர் தனது 83ஆவது வயது வரை திடகாத்திரமாக வாழ்ந்து மாரடைப்பினால் நல்ல மரணத்தைப் பலரும் போற்றத்தக்க வகையில் தழுவிக் கொண்டார்.

ஆரம்பகாலத் தொழில் வாழ்க்கை ஆங்கிலேயர் ஆட்சியில் தேயிலைத் தோட்ட அதிகாரியாகக் கடமை புரிந்தார். பின்னர் 1940 ஆம் ஆண்டு முதல் இறப்பு வரை இலங்கையின் பிரபல தொழிற் ஸ்தாபனமொன்றின் ஆரம்ப ஊக்குவிப்பாளரும் மேற்பார்வையாளருமாகவிளங்கினார்.

சமூக வேறுபாடின்றிப் பலர் அன்பையும் பெற்றுச் சிறந்த சமய. சமூகத் தொண்டனாகவும் மொழிப்பற்றுடைய ஒரு தொண்டனாகவும ஆர்வத்துடன் இறுதிக் காலம வரை திகழ்ந்தார். இப்பெரியாரின் இழப்பு எம் சமுதாயத்துக்கு மறக்கமுடியாத சம்பவமொன்றாகும்.

வீரகேசரி—(27—9—85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rajeswari Press
No. 18, Prince Street,
Colombo-11,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org